*3*

# செவ்வாய்க்கிழமை

## மத்தேயு 21:18–25:46; மாற்கு 11:20–13:37; லூக்கா 20; 21; யோவான் 12:20–50

*“அவர்கள், பேச்சிலே அவரை அகப்படுத்தும்படிக்கு, பரிசேயரிலும் ஏரோதியரிலும் சிலரை அவரிடத்தில் அனுப்பினார்கள்” (மாற்கு 12:13).*

வேதாகமத்தில் கிறிஸ்துவின் வாழ்வு பற்றி பதிவு செய்யப் பட்டுள்ள நாட்கள் யாவற்றிலும் [இந்த] செவ்வாய்க்கிழமை மிகவும் பணிமும்முரமான நாளாயிருந்தது. அவர் தேவாலயத்தைச் சுத்தி கரித்தபோது, யூதத்துவ நடத்துனர்களின் வருமானக் கணக்குப்புத்தகங்களில் தாக்குதலை ஏற்படுத்தியிருந்தார். இது அவர்களின் கவனத்தைப் பெற்றது. யூதத்துவத் தலைவர்கள் தேவாலயத்தை “கள்வர் குகை”யாக்கியிருந்தனர்.

அவர்கள் இயேசுவின்மீது கோபங்கொண்டு, “உனக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார்?”; “நீ எப்படிப்பட்டவன்?”; “நீ உன்னை யாரென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்?” என்று கேட்டு, அவர்கள் இந்த கலிலேயனை விரைவில் நகரில் இருந்து துரத்திவிட முடியும் என்று நினைத்தனர். அவர் தம்மை, “தேவன்” என்று கூறி, அவர்களுக்குப் பதில் அளித்திருந்தால், அவர் தொலைந்தார். அவர்கள் அவர்மீது தேவதூஷணக் குற்றம் சாட்டியிருப்பார்கள். அவர் தம்மை, “மனிதன்” என்று கூறி, அவர்களுக்குப் பதில் அளித்து இருந்தால், அவர் இன்னமும் தொலைந்தார், ஏனென்றால் அவர் செய்திருந்த செயலைச் செய்யும் உரிமை அவருக்கு இல்லையென்று அவர்கள் கூறியிருப்பார்கள். இருப்பினும், இயேசு “யோவான் யாரிடத்திலிருந்து அதிகாரம் பெற்றார்?” என்று கேட்டதன் மூலம் சூழ்நிலையை திருப்பிப் போட்டார். இயேசு அக்கினியைக் கொண்டு அக்கினியுடன் போராடினார். அவர்கள் அவருக்குப் பதிலளிக்க மறுத்துவிட்டனர், எனவே இயேசு அவர்களுக்குப் பதில் அளிக்கவில்லை! (மத்தேயு 21:23-27; மாற்கு 11:27-33; லூக்கா 20:1-8ஐக் காணவும்). யூதத்தலைவர்கள் இயேசுவின் ஆதாரச்சான்றுகளைக் கேட்டு விசாரிப்பதன்மூலம் அவரைச் சிறுமைப்படுத்த முயற்சி செய்தனர்: “நீ எங்கு சென்று பள்ளியில் பயின்றாய்? நீ ஒரு ஆசாரியனல்ல, அபிஷேகிக்கப்பட்ட ரபியும் அல்ல, அல்லது எருசலேம் குருமடத்தில் பயின்று பட்டம் பெற்றவனுமல்ல.” அவர் “மாபெரும் வாதம் செய்பவர்” என்று விரைவிலேயே அவர்கள் கண்டறிந்தனர். அவர் அவர்களின் மதியீனத்தை வெளிப்படுத்தினார்.

# உவமைகளில் பாடங்கள்

இந்த சந்தர்ப்பப்பொருளில் இயேசு மூன்று உவமைகளைப் போதித்தார். அவர் உவமைகளில் போதித்தது ஏன் மற்றும் அவர் அர்த்தப்படுத்தியது என்ன என்று அப்போஸ்தலர்கள் கேட்டனர் (மத்தேயு 13:10, 36). இந்த நடைமுறை தமது பின்பற்றாளர்களின் மத்தியில் வெறும் ஆர்வலர்களாய் மாத்திரம் இருந்தவர்களை நீக்கிப் போட்டதென்று அவர் கூறினார். உவமைகள் “சிறு பிள்ளைகளின் கதைகள்” அல்ல. அவைகள் உங்களையே நீங்கள் உணர்த்திக்கொள்ள மென்மையாக வழிநடத்துகின்றன.

முதலாவது இயேசு இரண்டு மகன்களைப் பற்றிய உவமையை முன் வைத்தார், இது மனந்திரும்புதல் என்றால் என்ன என்று விவரிக்கிறது (மத்தேயு 21:28-32). ஒரு மகன் தனது தந்தைக்குக் கீழ்ப்படிய மறுத்து, பின்பு மனந்திரும்பி கீழ்ப்படிந்தான், இன்னொருவனோ கீழ்ப்படிவதாகக் கூறியும் பிற்பாடு அவ்வாறு கீழ்ப்படியாதிருந்தான். ஆயக்காரர்கள் (வரி வசூலிப்பவர்கள்) மற்றும் வேசிகள் தேவனுடைய சமூகத்தில் பிரவேசிக்கையில் “பக்திமான்கள்” சிலரால் அதுமுடியாமற்போகும். ஆயக்காரர்களும் வேசிகளும் இயேசுவைச் சிலுவையில் அறையவில்லை. இது தேவனுடைய மக்களினமான இஸ்ரவேலினால் செய்யப்பட்டது. எருசலேம் தேவனுடைய நகரமாயிருந்தது. எருசலேமின் உள்ளே தேவாலயம் இருந்தது, ஆனால் அந்த நகரத்தின் மதில்களின் வெளிப்புறத்தில் இயேசு விரைவிலேயே சிலுவையில் அறையப்படவிருந்தார். மதவாதிகள் எவ்வளவு ஒழுக்கங்கெட்டவர்களாக, குருடர்களாக, மேட்டிமையுள்ளவர்களாக, மற்றும் தப்பெண்ணம் கொண்டவர்களாக இருக்கமுடியும் என்பதைக் காணுதல் அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது.

அடுத்தபடியாக, நில உடமையாளரின் மகனைக் கொன்றுபோட்ட துன்மார்க்கமான குத்தகைக்காரர்களைப் பற்றிய உவமையொன்றை இயேசு கூறினார், இது அவர் எப்படிப் புறக்கணிக்கப்படுவார் என்பதை விவரித்தது (மத்தேயு 21:33-44; மாற்கு 12:1-12; லூக்கா 20:9-19). அவர் இஸ்ரவேலை இரட்சித்திருக்கக்கூடிய ஆனால் புறம்பே தள்ளி வீசப்பட்ட கல்லைப் பற்றிப் பேசினார். இயேசு தம்மைப்பற்றியும் யூதத்துவ நடத்துனர்களைப்பற்றியும் பேசினார் என்பதை அவர்கள் அறிந்தனர்.

அவர் திருமணவிருந்து பற்றிய உவமையொன்றைக் கூறினார், அது அவரது அழைப்பைச் சிலர் எவ்வாறு புறக்கணிப்பார்கள் என்பதைக் காண்பித்தது (மத்தேயு 22:2-14; லூக்கா 14:16-24). உறவினர்களும் நண்பர்களும் அழைப்பைப் புறக்கணித்தது மட்டுமின்றி, அதைக் கொலை விளையாட்டுக்கான சந்தர்ப்பமாகவும் பயன்படுத்தினர். தன் மகனுக்குத் திருமணம் ஏற்பாடு செய்திருந்த அரசர் கடுங்கோபம் கொண்டவராக, “ஆகையால் நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்” என்று கூறினார் (மத்தேயு 22:9). (அழைப்பு என்ற) சிலாக்கியத்தைப் பெற்றவர்கள் தங்களைத் தாங்களே அடைத்துக்கொண்டபோது, பொதுவான/சாதாரணமான மக்கள்

அழைக்கப்பட்டனர். சாதாரணமக்கள் இயேசுவின் உபதேசத்தைச் சந்தோஷ மாய் ஏற்றுக்கொண்டதில் வியப்பெதுவும் இல்லை (மாற்கு 12:37).

## வாக்குவாதங்கள் தொடங்குகின்றன

விரைவிலேயே பரிசேயர்களும் ஏரோதியர்களும்[1] இயேசுவின் வார்த் தைகளில் அவரை அகப்படுத்தும்படிக்கு அவரிடத்தில் ஒன்றாகக் கூடிவந் தனர். பரிசேயர்கள் ஏரோதியர்களை வெறுத்து, அவர்கள் காட்டிக் கொடுப் பவர்கள் என்று நம்பியிருந்தனர் - ஆனால் அவர்கள் இயேசுவை இன்னும் அதிகமாய் வெறுத்தனர். இவ்விரு குழுக்களும் இயேசுவுக்கு முன்பாகத் தந்திரமான கேள்வியொன்றை வைத்தன: "வரிசெலுத்துதல் பற்றிய விஷயம் என்ன?" "இராயனுக்கு வரி செலுத்தலாமா?" இயேசு நாண யத்தைப் பற்றிப் பிடித்தவாறு, "இராயனுடையதை இராயனுக்கும்,தேவனு டையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள்" என்று கூறினார் (மத்தேயு 22:21). இது அவர்களை அமைதியாக்கி அதிர்ச்சிக்குள்ளாக்கிற்று.

சதுசேயர்கள்[2] இயேசுவிடம் வந்தபோது, அவர்கள் அவருக்கு மதியீன மானதை மாத்திரமே அளித்தனர். இயேசு அவர்களை நேரடியாக எதிர்த்து நின்றார். அவர், "நீங்கள் வேதவாக்கியங்களையும் தேவனுடைய வல்லமை யையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்" என்று கூறினார் (மத்தேயு 22:29; மாற்கு 12:24).

பிடிவாதமிக்க பரிசேயர்கள் ஒரு நியாயசாஸ்திரியுடன் திரும்பி வந்தனர், அந்த நியாயசாஸ்திரி, "நியாயப்பிரமாணத்திலே எந்தக்கற்பனை பிரதானமானது?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "தேவன்மீது அன்பு கூருவாயாக" என்று பதில் அளித்து, பின்பு இரண்டாவது கட்டளையையும் கூடுதலாகக் கூறினார்: "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனி டத்திலும் அன்புகூருவாயாக." அவரது பதில் நியாயசாஸ்திரியின் வாயை அடைத்தது. (மத்தேயு 22:34-40; மாற்கு 12:28-34ஐக் காணவும்.)

பின்பு இயேசு அவர்களிடத்தில் மேசியா யாராயிருந்தார் என்று கேட்டார். அவர்கள் அதற்குப் பதில் ஒன்றும் அளிக்கவில்லை. இந்த இடத்தில், வாக்குவாதங்கள் முடிந்தன. (மத்தேயு 22:41-46; மாற்கு 12:35-37; லூக்கா 20:41-44ஐக் காணவும்.)

## ஒரு கூர்மையான பிரசங்கம்

இவை யாவற்றையும் தொடர்ந்து, இயேசு வேத வாக்கியங்களில் உள்ளவற்றிலேயே மிகவும் கடுமையாகத் தாக்குகிற பிரசங்கத்தைப் பிரசங்கித்தார் (மத்தேயு 23). அவர் யூதத்துவ நடத்துனர்களை "பாம்புகள்" மற்றும் "குருடரான வழிகாட்டிகள்" என்று அழைத்தார். அவர்களை "மாய் மாலக்காரர்கள்" என்று முத்திரைகுத்தி, அவர்களுக்கு ஏழு சாபங்களைக் கூறினார். "நரகாக்கினைக்கு நீங்கள் எப்படித் தப்பமுடியும்?" என்று அவர்களிடத்தில் அவர் கேட்டார். பின்பு அவர், "எருசலேமே, எருசலேமே, ... நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று" என்று

*கதறினார் (மத்தேயு 23:37; லூக்கா 13:34ஐக் காணவும்).*

## தீர்க்கதரிசனமும் பிரசங்கித்தலும்

*அவர்கள் தேவாலயத்திற்கு வெளியே நடந்து செல்லுகையில், அவரது சீஷர்கள் அவரிடத்தில் தேவாலயத்தின் வீழ்ச்சியைப் பற்றி மூன்று கேள்விகள் கேட்டனர்: "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?"; "உம்முடைய வருகைக்கு அடையாளம் என்ன?"; "காலம் எப்போது முடியும்?" இந்தக் கேள்விகளுக்கு இயேசு மத்தேயு 24, மாற்கு 13, மற்றும் லூக்கா 21 ஆகியவற்றில் பதில் அளித்தார். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், அவர் இன்னமும் போதித்துக்கொண்டிருந்தார்.*

*இங்கு நாம் தான் வைத்திருந்த யாவற்றையும் தேவனுக்குக் கொடுத்திருந்த "இரண்டு காசுகள் உடைய விதவை" பற்றி வாசிக்கிறோம் (மாற்கு 12:41-44; லூக்கா 21:1-4). எல்லா மாய்மாலங்களுக்கும் மத்தியில், தேவன் உண்மையில் தேவனுக்குக் கொடுத்தல் என்றால் என்ன என்பதை எல்லாக் காலங்களிலும் எல்லா மக்களுக்கும் நினைவூட்டுவதற்காக இந்த விதவையை அனுப்பி வைத்தார்! என்ன ஒரு தேவன்!*

*இடர்ப்பாடு வந்து கொண்டிருந்தது! கூட்டங்களும் விமர்சனம் செய்பவர்களும் இருந்தபோதிலும், இயேசு தமது சீஷர்களுக்கு ஆழ்ந்த கருத்துள்ள மூன்று உவமைகளைப் போதித்தார்: ஆயத்தமாயிருத்தலை வலியுறுத்திய பத்துக் கன்னிகைகள் பற்றிய உவமை; பொறுப்பை வலியுறுத்திய தாலந்துகளின் உவமை; நியாயத்தீர்ப்பைச் சித்தரித்த செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் பற்றிய உவமை (மத்தேயு 25). இயேசு அந்த நாளில் பிரசங்கித்த பிரகாரம் தேவனுடைய எந்த ஊழியரும் எந்த நாளிலும் பிரசங்கித்ததில்லை, ஆனாலும் அவரது பிரசங்கம் செவிடான காதுகளிலேயே விழுந்தன.*

*என்ன ஒரு நாள்!*

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

*குறிப்புகள்*

*[1]இயேசுவின் நாட்களில் இருந்த மதத்தலைவர்களில் ஒருவேளை மிகவும் செல்வாக்கு நிறைந்தவர்களான பரிசேயர்கள் சுயநீதியும் சட்டப்பூர்வமாயிருத்தல் என்பதையும் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டிருந்தனர். ஏரோதியர்கள் என்பவர்கள் பலஸ்தீனத்தில் ஏரோதின் குடும்பத்திற்கு அதிகாரத்தை அதிகப்படுத்தத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு அரசியல் குழுவாயிருந்தனர். [2]சதுசேயர்கள் என்பவர்கள் ஐசுவரியம் கொண்ட உயர்குடி மக்களாயிருந்தனர், இவர்களில் பலர் ஆசாரியர்களாயிருந்தனர். இயேசு இவர்களின் அதிகாரத்துவத்திற்கு அச்சுறுத்தலாக இருந்தபடியால் இவர்கள் அவரை வெறுத்தனர்.*